# காரைக்காலில் அறிவியல் கண்காட்சி

■ காரைக்கால்

காரைக்கால் தனியார் கப்பல் துறைமுகம், டாக்டர் அப்துல் கலாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பவுண்டேஷன் ஆகியவை இணைந்து டாக்டர் கலாம் இன்னொவேஷன் கிட்ஸ் கண்காட்சியை காரைக்கால் மாவட்டம் வரிச்சிக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நேற்று நடத்தின.

கண்காட்சியில் காரைக்கால், நாகப்பட்டினம், நாகூர் பகுதிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 700-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தங்களின் பல்வேறு துறைசார்ந்த அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதில் தேர்ந்தெடுக்கப்படும் 100 மாணவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பவுண் டேஷன் மூலம் ஓர் ஆண்டுக்கு மின்னணுவியல், ஏரோஸ்பேஸ் மற்றும் ரோபோட்டிக்ஸ் பிரிவுகளில் இலவச பயிற்சி அளிக்கப்படும். காரைக்கால் ஆட்சியர் ஆர்.கேசவன், எம்எல்ஏ கீதா ஆனந்தன் உள்ளிட்டோர் மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டனர்.